**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC -243/2023**

**வழக்கு சாட்சி :PW3(கூடுதல் சாட்சி 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர், அன்னவாசல் |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரிகள் ஆஜர் .**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 05th day of March 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்றத்திற்கு வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-</u>**

1. நான் தற்போது இலுப்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் பணி ஓய்வு பெற்றுவிட்டபடியால் அவருக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி பெற்று சாட்சியம் அளிக்கிறேன். மேற்சொன்ன காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து ஆவணங்களை பொருத்து எனக்கு தெரியும்.

2. கடந்த 01.09.2023 -ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் சண்முகம் நிலைய பொறுப்பில் இருந்த போது இலுப்பூர் காவல் ஆய்வாளர்கள் உத்தரவின் பேரில் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சல் அவர்களின் தனிபிரிவு நடப்பு தாள் எண்.C.No.5588410/CM CELL/2023 , Dated: 03.08.2023 இலுப்பூர் அவர்களின் நடப்பு தாள் எண்.C.No.235/CM CELL/2023 Dated:03.08.2023 இலுப்பூர் காவல் நிலைய நடப்பு தாள் எண்.C.No.38/J1 PS/CM CELL/2023 மனுவினைப் பார்வையிட்டு தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் தாலுகா, களப்பாகுளத்தைச் சேர்ந்த கணபதி நாச்சியார், க/பெ.ஐசக் பாண்டியன் என்பவரின் புகார் மனுவினைப் பார்வையிட்டு குற்ற எண்: 209/2023 இதச பிரிவுகள் 294 (b) மற்றும் 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் அன்றைய தினமே சம்பவ இடமான இலுப்பூர் பாத்திமா நகர் மங்களம் மஹால் எதிரே 18.45 மணிக்கு சென்று சாட்சிகள் காதர்பாட்ஷா மற்றும் ஷேக் தாவூத் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பட்டியல் சாட்சிகளான 1 முதல் 8 வரையானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் பிணை பெற்றுவிட்டபடியால் எதிரிகளை கைது செய்யவில்லை.

அரசு தரப்பில் அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்து காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எ.த.கு.வி</u>

அ.சா. 1 கொடுத்த புகாரை முறையான முதல் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட அரசுத்தரப்பு சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.